உ

சிவமயம்

# இந்துசாதனம்

பிரதி விலை: சதம் 20

சைவ பரிபாலன சபை வெளியீடு.

ஆரம்பம்: விரோதி ஹூ (1889) ஆவணிமீ 28-ம் உ அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அஎ] யாழ்ப்பாணம்: இராக்ஷத ஹூ ஆனிமீ கஉ-உ வெள்ளிக்கிழமை (27-6-1975) [இல: கஉ

## குரு - சீட மரபில்

### பண்ணிசை பற்றி ஒரு விஞ்ஞாபனம்

[ குரு: திரு. இ. அப்பாசாமி ஓதுவாமூர்த்திகள் அவர்கள்.
சீடர்: திரு. மு. குமாரசிங்கம் அவர்கள். ]

I

வேதாத்தியயனம் குரு-சிஷ்யக் கிரமத்தில் நடந்து வருவதுபோலத், தமிழ் வேதமாகிய தேவாரத்தை முதன்மையாகக் கொண்ட திருமுறைப் பாராயணம் குரு சிஷ்யக் கிரமத்தில் ஓதுவார் பரம்பரையில் இருந்து வந்தது.

திருமுறைப் பாராயணத்தில் இரண்டு அம்சம் மிகமிக முக்கியமானவை. ஒன்று பண்; மற்றையது இராகம். இந்த இரண்டுக்கும் உபகரிக்கும் முறையில் மூன்றுவதாய் மற்றென்றும் முக்கியமானது. அது கட்டளை. கட்டளையாவது பாடுவோரின் மெய்ப்பாட்டு விசேடத்தால் பாடலில் உண்டாகும் வேறுபாடு; வேறு.

பண் இராகம் கட்டளை என்ற மூன்றன் தொடர்பு ஆராய்தற்பாலது. அந்த ஆராய்ச்சியால் மறைந்த பல உண்மைகள் தெளிவாகலாம்.

II

ஒலி உலகு, உள் ஒலி. புற ஒலி என இரண்டு வகை. உள்ளொலி உடம்பினுள்ளே மூலஸ்தானத்திலிருந்தெழும் சூக்குமை முதலிய வாக்குக்களின் விருத்தியாகிய எழுத்தொலியாம்.

புற ஒலி உடம்புக்குப் புறத்தே எழுகின்ற அலை ஒலி முழவொலி போல்வனவாம்.

உள்ளொலி சுத்தமாயா காரியம், அதனால் அவ்வொலி வைந்தவம் எனப்படும், விந்து சுத்தமாயை. அதிற் பிறந்தமையால் வைந்தவம் எனப்பட்டது,

ஆகாயம் முதலிய பூதங்களிலிருந்து பிறப்பது புற ஒலி. பூதங்களிலிருந்து பிறந்தமையால் புற ஒலி பௌதிகம் எனப்படும்.

உள்ளொலியாகிய வைந்தவம் தன் செவிவரை செல்லும் அவ்வொலி பிறர் செவிக்குஞ் செல்ல வேண்டுமாயின் பௌதிக ஒலி, வைந்தவ ஒலியோடு தொடர்புபட்டு உபகரிக்கும்.

வைந்தவ ஒலி உயிர். உயிர்க்கு உபகரிக்கும் உடல் போன்ற பௌதிகமாகிய புற ஒலி.

வைந்தவ ஒலியே ஆன்மாவின் அறிவை விருத்தி செய்து ஞானத்துக்கு வழி செய்வது: அதற்கு உதவுவதால் மேன்மை அடைகின்றது பௌதிக ஒலி.

III

வைந்தவ ஒலி ஆன்மாக்களின் பக்குவ அபக்குவத்துக்கேற்ப உயர்வு தாழ்வு உடையதாயிருக்கும். மாநுடச் சட்டை சாத்தியவர்களில் சம்பந்தப்பிள்ளைக்கு மேலே ஒருவரைச் சொல்லுதல் இயலாது, பிள்ளையார் அபர சுப்பிரமண்யர். பிள்ளையார் பாலெழும் வைந்தவ ஒலி உயர்வற உயர்ந்தது.

பிள்ளையாருக்கு மூன்றும் வயசில் ஒரு தினம் மெய்ப்பொருட் காட்சி தலைப்பட்டது. வைத்த கண் வாங்காமல் உற்று நோக்கியபடி நின்றார் பிள்ளையார். அக் காட்சியைக் காணுங் கண்ணில்லாமையால் தாதையார் தவித்தார்.

தாதையார் நிலையை ஒருவாறுணர்ந்த பிள்ளையார்பால் தாம் கண்ட காட்சியின் இயல், மெய்ப்பாட்டின் மிகுதியால், பாடலாய் உதயமாயது. பாடல் வைந்தவ ஒலித்திரள், அது பௌதிக ஒலியோடியைந்து தாதையார் செவிக்குப் புலமாயது. தாதையார் அப் பாடல் உணர்த்தும் இயல் மூலம், அவ் வியலுக்கு மூலமான காட்சியைக் கற்பனை செய்து களி துளும்பிப் பரவச முறுவாராயினர்.

இச் சந்தர்ப்பத்தில் மெய்ப் பொருட் காட்சி மறைந்ததாக; பிள்ளையார் நிலை என்னும்! விதிவசத்தால் எதிர்ப்பட்ட தலைவன் தலைவியரின் பிரிவில் வைத்துப் பிள்ளையார்நிலை சிந்திக்கற்பாலது.

தாதையார், காட்சியின் சாயலாகிய இயலால் அமைதியுறுமாறுபோல, பிள்ளையார் உள்ளம் அப்பாடலின் இயல்கொண்டு அமைதியுறுமா! முந்திய மெய்ப் பொருட் காட்சியை மீண்டுந் தலைப்படுதற்கு உள்ளம் கிளர்ந்தெழுமன்றே!

உள்ள எழுச்சிக்கு உபகரிக்கும் முறையில், ஒலித் திரளான பாட்டிலிருந்து, மென்மையான இசை, நீர்த் திரளிலிருந்து நீராவி மேலெழுவதுபோல மேலெழா நிற்கும். அவ் வாறெழும் இசையில், சப்த சுரங்கள் பண்ணைப் பிறப்பிக்கும். பண் இசையுமன்று, இசையில் வேறுமன்று.

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

## குருஞான சம்பந்தர் குருபூசை

திருதருமை ஆதீனம் 26-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீ ல ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள், மே 21 ஆம் நாள் முதல் 31 ஆம் நாள் வரை ஆதீன ஸ்தாபகரான ஸ்ரீ ல ஸ்ரீ குருஞான சம்பந்தரின் குருபூஜை விழாவையும், ஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் ஜீவசமாதியில் எழுந்தருளி காட்சி அளித்துக்கொண்டுவரும் ஸ்ரீ ஞானம்பிகை சமேத ஸ்ரீ. ஞானபுரீசுவர சுவாமி திருக்கோயிலின் பெருவிழாவையும் சிறப்பாக நடத்தி வைத்தார்கள்.

10 நாள் விழாவில் சமயப் பயிற்சி வகுப்பும், திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடும் நடைபெற்றது,

மகாவித்துவான் திரு ச. தண்டபாணி தேசிகர், மகாவித்துவான் திரு சி. அருணை வடிவேல் முதலியார், கயப்பாக்கம் திரு. சோமசுந்தரம் செட்டியார் 'திருக்கோயில்' ஆசிரியர் திரு. என். ஆர். முருகவேள் திருவாவடுதுறை ஆதீன வித்துவான் திரு க. வச்சிரவேல் முதலியார், மற்றும் பேராசிரியர்கள் 10 நாளும் காலை—மாலை பயிற்சி வகுப்புகளை நடத்தினர்.

மேலும் வழக்காடும் மன்றம்—பட்டி மண்டபம்—உரையரங்கம்—கவியரங்கம்—கருத்தரங்கம் முதலானவையும் விழாவில் நடைபெற்றது.

மே 30 ஆம் நாள் காலை ஸ்ரீ ல ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் ஆதீன பூஜா மூர்த்தியாகவுள்ள ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்கு சிறப்பாக அபிஷேக ஆராதனைகளை நடத்திவைத்து அனைவருக்கும் அருட்பிரசாதம் வழங்கினார்கள்.

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்,

## நேயர் நெஞ்சம்

### ஆலோசனைகளை அவதானிப்பது அவசியம்

—0—

ஆதியும் அந்தமுமில்லாச் சைவசமயம் எங்கள் இலங்கை நாட்டுக்குப் பூர்வீகமான சமயமாகும். அப்படியே தமிழ்ப் பாஷையும் தமிழ்ச் சமூகமும் எங்கள் தேசத்திற்கு இருந்து வந்தன, பின்பு ஐரோப்பிய நாகரீகமும் வேறு சமயங்களும் வந்தன சைவத்தையும், தமிழையும் காக்க எப்போதும் தலைமுறை தலைமுறையாகப் பெரியார்கள் தோன்றினார்கள். இதன் நிமித்தம் இலங்கையிற் பழைய சைவ ஸ்தாபனமாகச் சைவ பரிபாலன சபை தோன்றியது. சைவத்தையும், தமிழையும் காத்துவர எங்கள் சபை அரிய தொண்டுகளை ஆற்றி வந்தது. இந்துசாதனம் Hindu Organ ஆகிய பத்திரிகைகளை ஸ்தாபித்து இப்பத்திரிகைகள் மூலமாகவும் விசேஷ தொண்டுகளை ஆற்றி வருகிறார்கள்,

எங்கள் சீவியத்தில் எங்கள் சைவ சமயம்தான் உயிர்நாடி ஆகும். இந்த மேலான சமயத்திற்கு எங்கள் திவ்வியமான கோயில்கள்தான் பொக்கிஷமாக இருந்து வந்திருக்கின்றன. இந்தக் கோயில்களின் சொத்துக்களைப் பாதுகாக்கவும், வேறு சைவ ஸ்தாபனங்களின் சொத்துக்களைப் பாதுகாக்கவும், எல்லாச்சைவமக்களும்விரும்புகிறார்கள். இப்படிவிருப்பமிருந்தாலும் நாங்கள் சரியான வழியிற் போக வேண்டும். இந்து ஆலோசனைக் குழு தயாரித்த சட்டம் பொருத்தமாகத் தோன்றவில்லை. அதை ஏற்றால் சைவ சமயத்திற்கும், சைவ மக்களுக்கும் அளவிலா நஷ்டமும் துக்கமும் ஏற்படும். இந்த விஷயத்தில் சைவ பரிபாலன சபையும், இந்துசாதனம் Hindu Organ பத்திரிகைகளும் எடுத்துவரும் முயற்சிகள் மிகப் பாராட்டத்தக்கவை. சபையின் ஆதரவில் நடந்த சைவப் பெரியார்கள் கூட்டமும், பத்திரிகைகளில் வெளிவந்த யோசனைகளும் மிக வரவேற்கத்தக்கவை.

சைவ பரிபாலன சபையின் யோசனைபோல் கொழும்பு விவேகானந்த சபை, இந்து மாமன்றம், வேறு பல ஸ்தாபனங்கள் இந்து ஆலோசனைக் குழு சமர்ப்பித்த சட்டத்தை எதிர்க்கிறார்கள். இந்த எதிர்ப்பைப் பொதுவாக இலங்கையிலிருக்கும் எல்லாச் சைவ மக்களும் அனுசரிக்கிறார்கள்.

இந்த நிலையில் இந்து ஆலோசனைக் குழுவில் இருக்கும் பெரியவர்கள்' விசேஷமாக இக்குழுவின் தலைவர் மிக மதிக்கப்பட்ட எங்கள் உயர்திரு. வி. சிவசுப்பிரமணியம் அவர்கள் மேலும் யோசித்துச் சிபாரிசுகளை அரசாங்கத்துக்கு அனுப்பாமல் விடுவது உத்தமம் ஏனெனில் நல் நோக்குடன் எழுதப்பட்டாலும், இப்போது தயாரித்த சட்டம் சைவ சமயத்திற்கு மிகப் பாதகமாக முடியும்.

நீதிபதி உயர்திரு. சிவசுப்பிரமணியம் அவர்கள் மிக மதிக்கப்பட்டவர், எங்கள் இந்துக் கல்லூரிப் பழைய மாணவர், சைவத்தை அநுஷ்டிப்பவர். அவரும் குழுவும் ஏனைய மதிப்பிற்குரிய அங்கத்தவர்களும், இவ் விஷயத்தைப் பின்போட்டு, மிக ஆறுதலாகச் சைவ சமூகத்தின் யோசனைகளைப் பெற்றுப் பொருத்தமான நடவடிக்கையை எடுக்குமாறு தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறேன்.

சு. சிவசுப்பிரமணியம்
சீவிய அங்கத்தவர்.
சைவபரிபாலன சபை,
யாழ்ப்பாணம் 18-6-75.

## மணவாளக்கோலம்

வண்ணார்பண்ணை பன்றிக்கோட்டுப்பிள்ளையார்கோவில் மணவாளக்கோலத் திருவிழா சார்பாக 28-6-78 சனிக்கிழமை காலை 9 மணி முதல் விசேட அபிஷேக ஆராதனை நடைபெறும். மாலை 6-30 மணிக்குக் கூட்டுப் பிரார்த்தனை, பக்திப் பாடல் என்பன இடம்பெறும். 1794-ம் ஆண்டு இவ்வாலயம் அமைக்கப்பெற்றது. சைவபரிபாலன சபைத்தலைவர் திரு. த சோமசுந்தரம் அவர்களைத் தலைவராகக் கொண்ட தர்மகர்த்தா சபையினர் பன்னிருவரால் இவ்வாலயம் பரிபாலனஞ் செய்யப்படுகின்றது. ——

## பொதுக் கூட்டம்

கொழும்பு விவேகானந்த சபையின் 72-ஆவது ஆண்டுப்பொதுக் கூட்டம் ஆனி மாதம் 15-ஆம் நாள் (29-6-75) ஞாயிற்றுக் கிழமை காலை 9-30 மணி முதல் சபை மண்டபத்தில் நடைபெறும்

அகில இலங்கை சைவ சித்தாந்த

## ஞானப் பெரு விழா

சைவபரிபாலன சபைத் தலைவர் திரு. த. சோமசுந்தரம் அவர்கள் 2-ம் நாள் விழாவுக்குத் தலைமை தாங்கிப்பேசும்பொழுது மகாநாடுகளின் அவசியத்தைப்பற்றி எடுத்துரைத்து ஒன்றிற்கு மேற்பட்ட சைவ சங்கங்கள் இணைந்து இவ்வகையான விழாக்களை நிகழ்த்துவது பெரிதும் விரும்பப்படுவதென்று கூறினர். ——

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

இராக்ஷத ஞூ ஆனி மீ கங-உ வெள்ளி

## சைவத்துறை விளங்க வைக்கும் சாதனங்கள்

தாரணி போற்றும் சமயம் சைவம். எங்கள் மதம் என்று இறுமாப்புடன் கூறிக்கொள்ளும் நாங்கள் இச் சமய நெறியின் இலக்கணத்தை எல்லோரும் அறிந்தொழுகி உய்வடைய விளங்க வைத்தல் வேண்டுமல்லவா? இப் பணியை இயற்றுவதற்காகவே ஆலய வழிபாடும் அடியார் பூசையும் மிக அவசியம் என்று சமய குரவர்கள் புகட்டியிருக்கின்றனர். மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு வழிகாட்டும் சாதனங்களில் உபதேசம் சிறந்த தொன்று. இதனையே இக்காலத்திற் சொற்பொழிவு என்றவகையிற் பேரறிஞர்கள் வாயிலாகக் கேட்கின்றோம். சமய மெய்யறிவு தரும் சற் பிரசங்கங்களை நாவலர் பெருமான் அக்காலத்தில் ஆற்றிச் சிவப் பண்புரைத்தனர். இந்த உகந்தமுறையைப் பேணியே சைவ மாநாடுகளைச் சங்கங்கள் ஆங்காங்கு அமைத்து மெய்கண்ட சாத்திரங்களையும் திருமுறைகளையும் கற்றுத் துறைபோய — ஆத்மீகச் செல்வர்களாகத் திகழும் நற்றவ சீலர்களைச் சிறப்புச் சொற்பெருக்க அழைக்கும் வழக்கம் பண்டுதொட்டு வளர்ந்து வருகின்றது. ஆனல் இப் புனிதப் பணி நிறைவுறுவதற்கு இடையூறாக அறிஞர்களை மாநாடுகளுக்குப் பெறுவதற்குப பயண ஒழுங்குக் கட்டுப்பாடுகள் இக்காலத்திற் பாதகமாயிருக்கின்றன. அவ்வாறின்றி சமய சம்பந்தமான சற்பிரசங்கங்களுக்குப் பேரறிஞர்களை எக்காலத்திலும் இலகுவாக அழைத்து மாநாடு நடத்துவதற்கு அரசினர் உதவி புரிய வேண்டும்.

பேரறிஞர்கள் ஆற்றும் சீரிய உரைகளின் அருமையை மக்கள் உணரவைக்கும் சிறந்த சாதனம் மாநாடாகும். இன்னமும் சைவசமயிகளுக்குறுதுணையாக வேண்டிய சாதனம் ஒன்றுண்டு. நூல்களின் வளத்தை நாம் எடுத்து நுவலும்பொழுது முதல் நூல்கள் வழிநூல்கள் என்ற இவையெல்லாம் மக்கள் மத்தியில் வழங்காதிருக்கும் நிலையையும் எடுத்துக் காட்டி இவற்றின் சாரத்தை நாவலர் பெருமான் வரைநத வினுவிடை ரூபமாக வெளியிடுதல் வேண்டற்பாலதென்று கருதுகின்றோம். சிவாகமங்களிலே சரியை கிரியை என்ற காண்டங்களிலே முக்கியமானவற்றின் பொருளைக் கைந்நூலாக வெளிப்படுத்துவது பெரும் பணியாகும். பொதுவாக மக்கள் சிவாகமத் தெளிவுள்ளவர்களாக விளங்குவதற்கு இவ்வகையிலே சைவ சபைகள் சங்கங்கள் மாநாடுகள் முயலுதல் நன்று!

## குரு - சீட மரபில் பண்ணிசைபற்றி.

(1-ஆம் பக்கத்து வளர்ச்சி)

இசையைத் தமிழ் செய்வது பண். தமிழ் செய்தலாவது, மறைந்த மெய்ப் பொருட் காட்சியை மீண்டும் மீண்டுந் தலைப்படுமாறு, அக் காட்சியோடு இசையை இசைவித்து, இசை தமிழாமாறு செய்வதாம்.

இயலாய தமிழ் வெறுஞ் சாயலை உணர்த்த, இசையாய தமிழ் இயலின் மூலத்தை உணர்த்தி மேன்மை உறுவதால். நிழலுக்கும் நிழல் தரும் மரத்துக்குமுள்ள வேறுபாடாயிருக்கும் இயற்றமிழுக்கும் இசையே தமிழாகும் இசைத் தமிழுக்குமுள்ள வேறுபாடு.

இசைத் தமிழ் வேறு இசைக் கலை வேறு. இசைக் கலையில் பாடலும் இசையும் உண்டு; இசைத் தமிழில் பாடல் இல்லை: இசையே தமிழ்.

இந்த இசையே தமிழான இசைத் தமிழ் பிறர் செவிக்கும் புலமாகும் நிலையில். இசையைப் பண் செய்த சப்தசுரம் பௌதிக ஒலியில் இராகஞ் செய்து உபகரிக்கும்;

பண் சூக்கும உடலாயின் இராகம் தூல உடலாம். உயிரும் உடலும் எனினும் அமையும்.

பண்ணும் இராகமும் ஒன்றுமாம்; வேறுமாம். ஒலி ஒற்றுமையால் ஒன்றும். பிறப்பு வேறுபாட்டால் வேறும். பண் வைந்தவ ஒலியிற் பிறப்பது. இராகம் பௌதிக ஒலியிற் பிறப்பது-

எந்தப் பண்ணுக்கு எந்த இராகம் என்பது இரண்டன் சூக்கும தூல சம்பந்தம் அறிந்தவரே அறிவர். பண்ணும் இராகமும் பருந்தும் நிழலும் போல் ஒன்றுபட்டு இனிது நடப்பதற்கு உபகாரமாயிருப்பது கட்டளை. அதுபற்றி மேலே சொல்லப்பட்டது.

இராகத்தோடு கூடிய பண்ணிசை சென்று முற்றுமிடத்தில் தொடங்குவது நாடகம். அங்கே பாடல், இசை யாதும் இல்லை. நாடகத் தமிழ் வேறு, நாடகக் கலை வேறு, நாடகக் கலையில் பாடல் இசை ஆடல் யாவும் உண்டு.

தக்ஷிணாமூர்த்தி முன்னிலையில் நால்வர் முனிவரர்க்கு நடந்தது நாடகம். அது மௌன முத்திரை.

நாடகம் ஒளி நெறி.

இசை ஒலி நெறி.

இயல் ஒலித் திரள் நெறி.

இவ்வாற்ருல் முத் தமிழாயிருப்பது, 'தோடுடைய செவியன்' என்ற பதிகம். இதுபோன்ற பதிகங்களே முத் தமிழ் முத்தமிழ் விரகர் சம்பந்தர். இவ்வாருய முத் தமிழ் ஏனைத் திருமுறைகளிலும் ஆங்காங்கு வரும் நால்வர் சமய குரவர் வாழ்க்கையே முத் தமிழ். இஃதிவ்வாருக.

### IV

இந்த நூற்றுண்டுச் சங்கீத விற்பன்னர்கள், இராகங்களை உண்டு பண்ணும் விதத்தையும், அவற்றின் விஸ்தார சஞ்சாரங்களையும் திறபட ஆராய்ந்திருக்கின்ருர்கள.

ஒலியின் வைந்தவ பௌதிக பேதங்களையும், வைந்தவம் அறிவை விருத்திசெய்து. அறிவுக்கறிவான ஞானத்துக்கு வாய்தல் ஆதலையும் வேதாகம சாரமான சிவஞானபோத மாபாடியம் ஆராய்ந் திருத்தலை ஆராய்ச்சிக்காரர் அறிய வாய்ப்பில்லாது போயது, மகா துரதஷ்டத்தில் மேல் துரதிர்ஷ்டமேயாம்.

ஆராய்ச்சிக் காரருக்குப் பண்ணிசை ஒரு இடறுகல். ஆராய்சிக் காரரோ பண்ணிசையை விட்டபாடில்லை. வருடந்தோறும் ஆராய்ச்சி செய்து அறிக்கை வெளியிட்டு வருகின்ருர்கள். அவர்கள அபிப்பிராயம் சட உலக சாத்திரிகள் சித்துலகம்பற்றி ஏதோ ஊகித்துச் சொல்லுவது போலும்!

'முத்தமிழ விரகர்' ஆகிய சம்பந்தப் பிள்ளையாரை இயலிசைப் புலவர் என்று வைத்துககொண்டு, உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாகிய சிலப்பதிகாரத்தை முத்தமிழ என்று நம்பிக்கொண்டிருக்கும்வரை பண்ணாராய்ச்சி முற்றுப்பெற்ற பாடேயில்லை.

ஆராய்ச்சிக்காரர் ஆராய்ச்சி முற்றுப் பெருமையால் பரம்பரை ஓதுவாகளையே சரணடைகின்றனர்.

திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபில் வந்த பெண் ஞெருத்தியேதான தேவாரத்துக்குப் பண்ணடைவு செய்யக்கூடியவளாயிருந்தாள் என்ற கதையை நோக்குமிடத்து, ஆராய்ச்சிக் காரருக்கு ஓதுவார் பரம்பரையைப் பின்பற்றும நிலை நேருவதில் நூதனமேயிலலை.

பெருமை மிக்கதாகிய ஓதுவார் பரம்பரையோ, காலப் போக்கில் சிவாசாரிய பரம்பரைபோல ஒடுக்கம் எய்தி வருவதாயிற்று

இளஞ் சந்ததியினர் பொருள் வருவாய் கருதிப் பலமேறு துறைகளிற் பிரவேசிப்பாராயினர்.

### V

திரு. இ. அப்பாசாமி ஓதுவா மூர்த்திகள் குல வித்தையாகிய பண் பயிற்சியோடு ஒரு சிறந்த சங்கீத வித்துவானிடம் சங்கீதத்திற் பல துறையிலும் பயின்றவர்கள். அவர் இயற்றிய 'சங்கீத ஆசான்' என்ற நூல் உயர்தரமானது. பண் பயிற்சியே ஓதுவா மூர்த்திகளுக்கு உயிர்,

பண் பயிற்சி மெல்ல மெல்ல வருங்காலத்திற் குன்றிவிடலாம் என்ற அச்சததால், மூர்த்திகளுக்குக் கவலை பெரிதாயிற்று. அதனல் இரண்டு பெரிய காரியஙகள செய்து வைக்கத் துணிந்தார்கள்.

ஒன்று, தமிழிசை மன்றம் ஒனறு நிறுவி, அதன் உயிர்ப்பாய பண் முறையைப் பரப்புவது.

இரண்டாவது, தேவாரப் பண்களுக்கு சுரம் அமைத்து, சங்கீதப் பயிற்சி உடையார் பயன் செய்ய வைப்பது.

இந்த இரு பெருங் காரியங்களையும் முன்னிட்டுக் கொண்டு சைவத் தமிழ் மக்கள் வதியுமிடங்களுக்குச் சுற்றுப பிரயாணஞ் செய்து, தேவாரங்களை ஓதிக் காட்டி வருவாராயினர்.

உறையூர் மே. சு. வடிவேற்பிள்ளை அவர்களும், மற்றுஞ் சில அன்பர்களும, கோலாலம்பூரில் சந்தித்து சுரஅமைப்பின் அருமையை உணர்ந்து, அச்சுச் செலவு முழுவதையும் நலகி விரைவில் அச்சிடும்படி ஊககப்படுததினுர்கள்,

1028-ம் ஆண்டு தேவாரப் பண் சுர அமைப்பு முதற் பாகம் வெளி வந்தது. இருபதுக்குக் குறையாத தேவாரப் பண்களுககுச் சுர அமைப்பும், முகப்பில் சுர பேதங்கள் தாளபேதங்கள் பறறிய விளக்கமும் இப் பதிப்பில் உண்டு.

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

## சட்டத் துறைப் பெரியாரின் பிரிவு

சைவபரிபாலன சபை உப செயலாளர்களில் ஒருவரான இராஜ ராஜேஸ்வரன் தங்கராசா அவர்களது தந்தையாரும் சபையின் துணைத் தலைவர்களில் ஒருவரான திரு. சி. செல்வராசா அவர்களது அன்புச் சகோதரருமாகிய சரவணமுத்து - தங்கராசா அவர்கள் (வழக்குரைஞர்) சிங்கப்பூரில் காலமாகிவிட்டார்.

கொழும்பு மாநகர சபை சட்ட ஆலோசகராகக் கடமை புரிந்த சரவணமுத்து தங்கராசா அவர்கள் நீண்ட கால சேவையின் பின்னர் அப்பதவியில் நின்றும் ஓய்வு பெற்ருர்

ஓய்வு கால வாழ்க்கையை அமைதியுடன் கழிக்க விரும்பி, சிங்கப்பூரில் தமது மகளுடன் வாழச்சென்ற அவரை அங்கும் அவரது திறமை மீண்டும் தொழிற்றுறைக்கு அழைத்துச் சென்றது. சிங்கப்பூர் துறைமுகத் தொழில் நிறுவன சட்ட ஆலோசகராக அவர் அங்கு பணி புரிந்தார்.

அவர்களது மரணச் சடங்குகள் 25-6-75 அன்று சிங்கப்பூரில் நடைபெற்றன.

மரணச்சடங்கில் இலங்கையில் தொழில் புரியும் அவரது இரு புத்திரர்களும் [இராஜராஜேஸ்வரன், குமாரன்] கலந்து கொண்டார்கள்.

## சிரமதானம்

மில்க்வைற் உரிமையாளர் திரு, க. கனகராசா அவர்கள் ஆரம்பித்து வைத்த கொழும்புத்துறை இலந்தைக் குளம் ஆளமாக்கும் சிரமதானப்பணியில் கொழும்புத்துறை மகாவித்தியாலய மாணவர்கள் சென்ற 25-6-75 புதன்கிழமைமுதல் அதிபர் தியாகராசா அவர்கள் தலைமையில் பங்கு பற்றினர்கள். அவ்வப்போது குளந்தோண்டும் பணியைப்பற்றி வித்தியாலய அதிபர் அவர்களும், நீர்வளப்பகுதி திரு. நடனசபாபதி அவர்களும், திரு. குலரத்தினம் அவர்களும் மாணவர்களுக்கு உரையாற்றி உற்சாக மூட்டினர்கள். கொழும்புத்துறை செங்கதிர்ப் பண்ணை இயக்குநர் திரு பொன்னம்பலம் அவர்கள் எல்லோருக்கும் நன்றி கூறினர்.

## தில்லையம்பதியில் சேக்கிழார் விழா

தில்லையம்பதியில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் அறநிலையத்திற்குச் சொந்தமான ஸ்ரீ சேக்கிழார் கோயிலில் (ஞானப்பிரகாசக்குளம வடகரையிலுள்ளது) நற்பொறுப்பாளர் உயர்திரு. தி க. ராசேசுவரன் அவர்கள் வைகாசித்திங்கள் 30-ஆம் நாள் 31-ஆம் நாள் இரு நாட்களில, ஸ்ரீ சேக்கிழார் குரு பூஜை விழாவை சிறப்பாக நடததி வைததார்கள்.

திருக்கோயில் பூஜகரான திரு. திருஞானசம்பந்த தேசிகர் அவர்கள் ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ சேக்கிழார். ஸ்ரீ ஞானப்பிரகாசர்மூர்த்தி தலஙகளுக்கு விசேட அபிஷேக அலஙகாரங்களை மங்கள இசை, திருமுறைப் பாராயணங்களுடன நடத்தி, ஸ்ரீ. கச்சியப்ப முனிவர், ஸ்ரீ நாவலர் பெருமான் உட்பட எல்லா மூர்த்தி தலங்களுக்கும் ஆராதனைகள் நடத்தி எல்லோருக்கும் பிரசாதங்கள் வழஙகினர்.

## குருஞானசம்பந்தர் குருபூசை

3 ஆம் பக்கத்து வளர்ச்சி

முன்னுள் நீதிபதி உயர்திரு S. மகராஜன் B. A., B. L அவர்கள், 'சிலம்புச்செலவர்' உயர்திரு. ம. பொ. சிவஞான கிராமணி அவர்கள் சென்னை உயர்நீதிமன்றம் நீதிபதி உயர் திரு. என். கிருஷ்ணசாமி செட்டியார் B. A, B. L. அவர்கள் மாநாட்டில் சிறப்புரைகள் வழங்குகையில் சமய நிலையைப் பற்றி உரையாற்றினுர்கள்.

மே 31 ஆம் நாள் மாலை தருமை ஆதீன இசைப்புலவர் சீர்காழி திரு. எஸ். கோவிந்தராஜன் குழுவினரின் இன்னிசையரங்கு நிகழ்ந்தது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நேயர் நெஞ்சம்

## யாரொடுநோவது! யாருக்கு எடுத்து உரைப்பது?

"இந்துசாதனம்"
கௌரவ ஆசிரியர் அவர்கள்
ஐயா,

"இன்பமே எந்நாளும் துன்பமில்லை" என்ற குறிக்கோளுடன் வாழ வேண்டியவர்கள் சைவமக்கள். ஆனால் துன்பமில்லை அவர்களைச் சோதிக்காமலில்லை! கொழும்பு மாநகரில் அண்மையில் நிகழ்ந்த சைவ சிதாந்த எழில் ஞானப்பெருவிழாவுக்கு சிறப்புச் சொற்பொழிவாளராக உயர்திரு. க. வச்சிரவேலு முதலியார் அவர்கள் வருகை தருவதாகக் குறிப்பிட்டிருந்தார்கள். இறுதியில் அவரது வரவு தடைப்பட்டுவிட்டது.

சென்ற வாரத்துக்கு முன் அ. இ சேக்கிழார் மன்றம் நடாத்திய குருபூசை விழாவுக்குத் தேவகோட்டையைச் சேர்ந்த சிவநெறிச் செல்வர் "பாலகவி" சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாளராகக் கலந்து கொள்ளுவார்கள் எனக் குறிப்பிட்டிருந்தார்கள். இவ்விழாவுக்கு வந்திருந்த ஏராளமான மக்கள் மத்தியில் தேசிகர் வருகையை எதிர்பார்த்திருந்தோம்; வரவில்லை! இவ்விழாவின் நாளைய நிகழ்ச்சிக்காவது வருவாரென எதிர்பார்க்கின்றோம் என அறிவித்தார்கள் விழா நிர்வாகிகள். ஆயிரக்கணக்கானசைவ அன்பர்கள் மன வேதனையோடு சென்றதை அவதானிக்க முடிந்தது! ஏன் இந்தநிலைமை?

சென்ற ஆண்டு யாழ். சைவ பரிபாலன சபையார் நடாத்திய அகில இலங்கைச் சைவ மகாநாட்டுக்குச் சிறப்புச் சொற்பொழிவாளராகக் கலந்துகொண்ட பெரியார் திரு. சி. இராமலிங்கம் அவர்கள் தாம் ஈழத்துக்கு சமயப்பிரசாரத்தின்பொருட்டு வரவிருந்த அமையம் பிரயாணத் தொடர்பில் விசா பெறல்) தமக்கு ஏற்பட்ட சொல்லொணாத இடர்பாடுகளையும் சிரமங்களையும் குறிப்பிட்டதை இன்னும் பலர் மறந்துவிடவில்லையே! இது நீதியாகுமா!

அன்று சேக்கிழார் விழாவுக்கு வந்த அன்பர்களுட் சிலர் சைவமக்களது இக்கால நிலைபற்றியும், சைவப்பேரறிஞரான முன்னாள் தமிழ் அமைச்சர் அமரர் திரு. சு. நடேசபிள்ளை அவர்கள் காலத்தில் அநுபவித்த உரிமைகள் மறுக்கப்படுகின்றன என்றும் கூறியதைக் கேட்கமுடிந்தது! தேசிகரவர்களும், வச்சிரவேலரவர்களும்முன்பும் ஈழத்துக்கு வந்து சைவசித்தாந்த சாத்திர வகுப்புகள் நடாத்தியும் பிரசங்கங்கள் நிகழ்த்தியும் அரிய சமயப்பணி புரிந்தவர்கள்.

தத்புருஷ தேசிகர் ஈழத்தில் சமயப்பிரசாரம் நடத்தி வந்து சைவ பரிபாலன சபையாதரவில்பாராட்டுவிழாநிகழ்ந்தது! பலபெரியார்கள் பேசினார்கள்! ....தேசிகருக்குப் பிரியாவிடை கூறுவது புத்தியாகாது! என எங்கள் சிவஞானச் செல்வர் பண்டிதமணி சி. க. அவர்கள் ஒரு தடவை குறிப்பிட்டிருந்தார்கள். சமய ஆசாரம் இது சைவ நீதி இது என்று நிமிர்ந்து சொல்லத்தக்கவர் தேசிகர். அவர் வருவது நல்லதே!

ஆதலால், சமய, கலை, கலாசார வளர்ச்சிக்கு தடைகள் எந்த நாட்டுக்கும் — எந்த இனத்துக்கும் இருத்தலாகாது! இதுவே அறிவுடையோர் கருத்து. இவைபற்றிப் பேசவேண்டிய இடங்களில் உள்ளவர்கள் பேசாதொழிந்தால் பாதிக்கப்பட்டு வேதனையுறும் இனங்கள்— 'யாரொடு நோவது....! யாருக்கெடுத்து உரைப்பது....?'

— 'நாயன்மார் - நாதன்',

## குருஞானசம்பந்தர்

1- ஆம் பக்கத்து வளர்ச்சி

ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் குருபூசை மலராக "சித்தாந்த வினா விடை" நூல்வெளியீடு செய்தார்கள்.

சென்னை உயர்நீதி மன்றத்தின் முன்னாள் நீதிபதி உயர்திரு. R. சதாசிவம் B. A. M. L. அவர்கள் முதல்நாள் தெய்வத்தமிழ் மாநாட்டை ஆரம்பித்து வைத்தார்கள்.

சென்னை, திருமதி சௌந்தரம் கைலாசம்அம்மையார், சென்னை உயர்நீதி மன்ற

வளர்ச்சி 2-ம் பக்கம்

## சைவ பரிபாலன சபை
### உறுப்பினர் சந்தா.

சபை அங்கத்தவர்கட்கு,

சபை உறுப்பினர் சந்தா பாக்கி உள்ளவர்கள் தயவு செய்து ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் 1975 ம் ஆண்டிற்குரிய சந்தாவையும் பழைய பாக்கிகளையும் செலுத்திவிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

### 1975-ம் ஆண்டு முதல் புதியசந்தா விபரம்

| | |
|---|---|
| சாதாரண அங்கத்தவர் ஆண்டுச் சந்தா (ஜனவரி முதல் டிசம்பர் வரை) | 20/— |
| பிரவேசக் கட்டணம் | 5/— |
| ஆயுள் அங்கத்தவர் சந்தா | 150/— |

பாக்கி இல்லாத அங்கத்தவர்கட்கு இலவசமாக 'இந்துசாதனம்' 'Hindu Organ' பத்திரிகை அனுப்பப்படும்.

சைவபரிபாலன சபை, யாழ்ப்பாணம், 9-6-75.
வை. இரகுநாதமுதலியார், கௌரவ செயலாளர்.

## குரு - சீட மரபில் பண்ணிசை பற்றி

(2- ஆம் பக்கத்து வளர்ச்சி)

இதே காலத்துக்கு அண்மையில் தோன்றிய அண்ணாமலைச் சர்வ கலாசாலை தமிழிசை மன்றம் ஒன்றை நிறுவியது. அப்பொழுது ஓதுவா மூர்த்திகள் தாமெடுத்துக்கொண்ட முதல் முயற்சியை, சர்வ கலாசாலையாரிடம் ஒப்பித்துவிட்டு, எக்காரணத்தினாலோ தாம் ஒதுங்கி நின்று, தம் பரம்பரைச் சொத்தைப் பேணக்கூடியவர்களைத் தேடிக் கொண்டிருந்தார்கள்,

1934 ம் ஆண்டு ஓதுவா மூர்த்திகள் கொழும்புக்கு வந்தபோது, தேடிய பொருளைக் கிடைக்கச் செய்தது திருவருள். அந்தப் பொருளே திரு. மு, குமாரசிங்கம் அவர்கள். சந்தித்தபோதே குரு சீட பாவம் உதயமானது.

திரு. குமாரசிங்கம் அவர்கள் இளமையில் மூன்றரை வருடகாலம் சங்கீத மகாவித்துவான் புத்துவாட்டிச் சோமுவிடம் சங்கீதப் பயிற்சியும், வேதாரணியம் ஐயாசாமிக் குருக்களிடம் மூன்று வருடகாலம் வாய்ப்பாட்டும் பயின்று பக்குவம் எய்தி இருந்தவர்கள்.

குரு சீடக் கிரமம் 1934 தொடக்கம் மூர்த்திகளின் மறைவு காலம் (1963) வரை இருந்து வந்தது.

உத்தியோக லீவு காலங்களையெல்லாம் குரு இல்லத்தில் பண் பயிற்சியில் கழித்தார்கள்.

திருமுறைப் பண்களனைத்திலும் பூரண பயிற்சி பெற்று விளங்கினார் சீடர். அது குருவுக்கும் பூரிப்பை உண்டாக்கியது,

திருமுறைப் பண்கள் முழுவதற்கும் சுரம் அமைத்துக் கொடுத்து, "இனி எங்கும் பண பயிற்சியைப் பரப்புக" என்று ஆசியும் வழங்கினார் குரு.

இச் சுர அமைப்பு, ஓதுவார் பரம்பரையில் வந்தகட்டளை வேறு பாட்டையும், அவ்வாறே பரம்பரை வழி வழி வந்த இராகத்தையும் அநுசரித்து அமைந்தது, இதற்கு மேலே இக்கால நிலையில் பண பயிற்சியை நல்ல முறையில பாதுகாத்தற்கு வழியே கிடையாது.

மேலும் தேவாரங்களை நான்கு வேறு பிரிவு செய்து, பாலர் தொட்டுப் பயிலுதற் கேற்றவாறு படிக்கிரமஞ் செய்துங் கொடுத்திருக்கின்றார்கள்.

சுர அமைப்பில் சில இடங்களில் தேவாரப் பண் சுர அமைப்பு முதற் பாகததோடு மாற்றம் காணப்படுமாயின அம் மாற்றம் குரு செய்து கொடுத்த திருத்தமேயாம். திரு, குமாரசிங்கம் அவர்கள் குரு வாக்கிய பரிபாலனத்தை மேற்கொண்டு; பாலா தொடக்கம் சங்கீத பூஷணங்கள் பரியந்தம் பயில வல்லவர்களுக்குக் கைம்மாறு கருதாது பண் பயிற்சி செய்து வருகின்றார்கள்.

தமக்கு வயசு முதிர்ந்தமையால் தம் கையிலிருக்குஞ் சுரக் குறிப்புக்களைச் சங்கீத ஆசிரியர் மயன்படுத்தத் தக்கவகையில் அச்சிட்டுப் பரப்புவதைத் தம குருவுக்குச் செய்து வைப்பதொரு கடமையாகவும் உணருகின்றார்கள்,

### VI

சைவ பரிபாலன சபையார் பெரியார் அவர்களிடமுள்ள சுரக் குறிப்புக்களைப் பேணி, முன்னம் குரு வெளியிட்ட புத்தகத்தோடொப்பிட்டுப் பரிசீலனை செய்து, பண்ணிசை வல்லுநர் சங்கீத விற்பன்னர் ஆகியோரின் அநுசரணை பெற்று வெளியிடின், அது சைவத்துக்குச் செய்வதொரு பெருஞ் சேவையே ஆகும்: திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபில் வந்த பண் மரபின் அருமையை நினைவு கூர்விப்பதுமாம்.

❁ ஒரு குறிப்பு; —

தேவாரப் பாட்டுக்கள் எல்லாம் இசை வடிவங்களுடனேயே முதன் முதலில் தோன்றின. செய்யுளாய் முதலில் இயற்றப்பட்டுப் பின்னர் அவைகளுக்கு இசை வகுக்கப்படவில்லை'.

'தேவாரப் பண்களை ஸ்வரப்படுத்தி வைக்கப்படாமல் போயினும் குரு சிஷ்ய பரம்பரை மூலமாகவும், ஓதுவார்களின் மூலமாகவும்' அவைகள் காப்பாற்றப்பட்டுள்ளன' எனகின்றார் பேராசிரியர் P. சாம்பவமூர்த்தி அவர்கள்.

'தேவாரம் இசை வடிவம்'
'பண்களுக்கு ஸ்வரம்'
'ஓதுவார் பரம்பரையின் பாதுகாப்பு'

என்ற மூன்று அம்சங்கள் கொண்ட இச் சிந்தனை, பேராசிரியர் 1970-ல் வெளியிட்ட கர்நாடக சங்கீதம் மூன்றும் புத்தகத்தின் பிற்சேர்க்கையில் உள்ளது. இவ்வாறுய சிந்தனை சாதாரணமானதன்று

பேராசிரியரோ கர்நாடக சங்கீத மகா சமுத்திரம், 1928-இல் 'தேவாரப் பண் சுர அமைப்பு' என்றொரு புத்தகம் வெளி வந்ததனை அறிந்திருக்கச் சந்தர்ப்பமே இல்லை. அறிந்திருப்பாராயின், அப் புத்தகமும் அதன் வழி வந்த திரு மு. குமாரசிங்கம் அவர்களிடம் இருக்கும் பண் சுரக் குறிப்புக்களும் சங்கீத உலகம் [illegible]ணத் தக்க வகையில் உந்த நிலையை எய்தி[illegible]

[ பண்டிதமணி. சி. கணபதிப்பிள்ளை அவர்கள் ]

## பிரிவிடுதல் நொத்தீஸ்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்
இல 13050

சின்னத்தம்பி மகள் ஞானம்மா, புலோலி தெற்கு புலோலி
வழக்காளி

எதிராக

1. சின்னத்தம்பி மகள் செல்லமுத்து
2. கந்தையா கைம்பெண் கனகம்மா
3. ஆறுமுகம் பேரானந்தநாயகம்
4. கந்தையா சந்திரகுலசிங்கம்
5. சந்திரகுலசிங்கம் பெண் பொன்னம்மா
6. கந்தையா கனகலிங்கசிவம்
7. கந்தையா சொக்கலிங்கம்
8. கந்தையா மகள் தங்கராணி
9. கந்தையா மகள் நகுலராணி
10. S, K. இராசையா
11. பெண் சிவக்கொழுந்து
12. கந்தையா ஈசுரபாதம்
13. கந்தமுத்து மகள் லீலாவதி

எதிரிகள்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி பருத்தித்துறை கோயிற்பற்று புலோலி கிழக்கு மழவராய குறிச்சியிறை "தேவரன்" நி. ப. 10 3/8. வீடு 1. தோட்டம் 1,

என்னும் ஆதனம் 1951-ம் ஆண்டின் 16-ம் இலக்கம் பிரிவிடுதல் கட்டளைச் சட்டத்திற்கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தில் ஓர் பிரிவிடுதல் வழக்கு தொடர்ந்திருக்கின்றதென்று இத்தாலுமக்கறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோட்டில் 1975-ம் ஆடி மீ 2 10 மணிக்குச் சமூகமளிக்கும்படி கட்டளை பண்ணப்பட்டிருக்கிறார்கள்.

கோட்டாரின் கட்டளைப்படி
M. Nadarajah
பிரதம லிகிதர்

1075-ம் வைகாசி மீ 26 உ

40, 27-6

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம டிஸ்திறிக் கோட்டில்

### வழக்கு இலக்கம். M. B 11629

சங்கானை கிழக்கு சங்கானை
2 வேலாயுதம் செல்வநாயகம் — வழக்காளி

எதிராக

சங்கானை கிழக்கு, சங்கானை
1. சவரிமுத்து யோசப் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M.B. 11629ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1975 ம் ஆடி மீ 18உ வெள்ளிக் கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபாய் 3850/-ம் 18-4-70 தொடக்கம் 11-9-70 வரைக்கும் ரூபாய் 2500/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 417-15 இதில் ரூபாய் 1000/- கொடுபட்டுள்ளது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு பிரிவு சங்கானை கோயிற்பற்று சங்கானை இறை முதலி வளவு நில. பர. இலா. 3 வீடும். இதற்கெல்லை கிழக்கு கதிரேசிப்பிள்ளை கைம்பெண் சின்னம்மாவும் பங்காளருக்கும் உரிய ஆதனம் வடக்கு ஒழுங்கையும் சவரிமுத்துவின பெண் அன்னம்மாவினுடைய ஆதனம். மேற்கு முத்தையாவின் பெண் அன்னப்பிள்ளையினுதனம் தெற்கு அரியநாயகமின் பெண் ரட்ணத்தினுதனம். மேற்கு எல்லை காணிக்குள் இருக்கும் கிணற்றில் ½ பங்கும் தூர்வையும் வழிவாய்க்கால் பாவிப்புருத்தும்.

பதிவிலக்கம் E 388/185

அ. போ எதிர்மனசிங்கி
கோமிஷனரும் விலைமதிப்பாளரும்

14 டேவிட்ரோட்
யாழ்ப்பாணம் 30-5.75

37 27-6

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### THOUGHTS TO BE TREASURED

அடியார் அடியார் அடியார்க்(கு) அடிமைக்கு
அடியனுப் நல்கிட்(டு) அடிமையும் பூண்டேன்,
அடியார் அருளால் அவனடி கூட
அடியான் இவன் என்(று) அடிமை கொண்டானே.

I became a slave giving myself up as a slave of slaves of (the Lord's) devotees and their servants. When I approached the Lord's Feet by the Grace of His devotees. He accepted me as His slave saying "this is my slave."

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

திருச்சிற்றம்பலம்

Hindu Organ

FRIDAY, JUNE 27, 1975

## So Near Yet So Far!

Presiding over one of the sessions of the Siddantha Conference that was held in Colombo last week-end, the President of the Jaffna Saiva Paripalana Sabhai deplored the situation that frequently tended to prevent invitees from India from attending conferences in Sri Lanka and suggested that the rigid regulations which govern travel between these two neighbouring countries should be reasonably relaxed in the case of priests, preachers, scholars and artistes whose visits are of a purely cultural and religious nature.

So close and yet so far-that is the position of Tamil Nad and Eelam which have close-knitting ti s of cultural, religious and linguistic affinity. The cultural blend of the glorious past which was certainly due to the easiness of access has been a boon to the peoples of these two countries. But with the tightening of regulations of travel the exchange of knowledge between Bharat and Sri Lanka by means of personal participation in conferences and ceremonies in temples by reputed scholars and exponents of Saiva Shastras has become a matter of stupendous difficulty. This is a matter of deep concern to everyone who is interested in the cultural, educational and religious affairs of both countries. It may be that smugglers and others of similar persuasions by their questionable conduct have forced the hand of the Authorities to become more rigid in the control of traffic between India and Sri Lanka. The restraint, however, should not be a general one, it should be specially meant for the smugglers. The Saiva Paripalana Sabhai in co-ordination with other organizations should appoint a delegation to meet the Authorities and impress on them the immediate need for special concessions being granted to that category of travellers which comprises only of leaders of religion, preachers, scholars and artistes whose participation in conferences is of religious, cultural and educational value.

# Proposed Hindu Temples Bill

By S. SIVASUBRAMANIAM
(Life Member, Jaffna Saiva Paripalana Sabhai)

(Continued from last issue)

7. In an inspiring editorial of the Hindu Organ of Friday March 9th, 1973, the concluding words of the article under the caption "Return to Religious Practice" occur- "The Blessings of the Almighty are ever there for those who seek a new method of living in which reason, justice, toleration and above all spiritual awareness will be the guiding principles. Practice of religion is then the panacea for all ills. And let us all use this prescription"
8. It is my humble submission that if special legislation is enacted in the manner it is proposed to be done, it would make the practice of Religion, including Temple Worship, and care of and service to Temples a very difficult burden for Trustees. Priests and Worshippers. The Hindu Public will then sustain an irreparable damage.
9. Realizing the dangers attendant thereon, the opinion of Hindus in all parts of Sri Lanka is adverse to the introduction by Government of the Bill proposed on behalf of the Hindu Religious Affairs Advisory Board appointed by the Mi n ster for Cultural Affairs
10. Unnecessary divisions among the Hindu Community without bringing any benefit whatsoever to the Community would be unwittingly created, if the present Draft Bill is proceeded with. Moreover, misunderstanding between the Gover ment on the one side and the Hindus on the other side will be created at the same time by the Bill being proceeded with.
11. In the circumstances, it will be appropriate and just for those members of the Hindu Religious Affairs Advisory Board including the Chairman Hon. Mr. Justice V, Sivasubramaniam who is dear to us and who is one of the most eminent sons of the country, not to proceed any further with their draft It will also be helpful to the cause of National Unity and the promotion of Religion if Government advises the Board accordingly.
12. In place of the Bill, suitable amendments to the Trusts Ordinance are worthy of consideration by the people and by the National State Assembly and Government The Hindu Religious Affairs Advisory Board, the Honourable Minister for Cultural Affairs and the Honourable Prime Minister and the Cabinet could be pleased generously to consider same in an all comprehending manner, taking in to account prevailing circumstances and needs and ultimate benefits and results,

**Sivayoga Swamigal Thirucharitam**: By Ka. Ki. Natarajan, Yoga Bhavanam, 10, Ponnappa Lane, Vannarponnai, Jaffna, Sri Lanka. **Rs. 7-75.**

The book gives a vivid and graphic account of the life of Sivayoga Swamigal who shed spiritual lustre in Ceylon, a decade ago. This is in verse form having two cantos and nineteen chapters, comprising 345 virutams. The verses are simple and sublime. The peculiar nature of Sivayoga Swamigal's Guru Chelleppa Swamigal, the Sivayoga Swamigal's initiation into the ascetic life, the pilgrimage he took to holy shrines and places in Ceylon and in India are for the readers very interesting The author throws light on the Swamigal's yoga and mystic experiences and the remarkable effort in organising a spiritual centre (Sivathondan Nilayam) and starting a publication unit for the propagation of Saivism (Sivathondan).

A. S. Gurusubrahmanyan
"Madras Hindu"

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்.

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Saiva Prakasa Press 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday June 27, 1975.

EDITOR-IN-CHIEF R. N. SIVAPIRAKASAM

## Vivekananda Sabhai Colombo

The following are among the many resolutions that will be discussed at the General Meeting of the Sabhai on 29-6-1975 in the Sabhai Hall,

"To request the Hon. Minister of Post & Telecommunication to issue a Postage Stamp to commemorate the late Sir Ponnampalam Ramanathan's 45th anniversary which occurs on 26th June, 1975.

To request the Hon. Minister and the General Manager of C. G. R. to prohibit selling liquor in the running passenger compartments."

### PARTITION NOTICE

IN THE DISTRICT COURT OF POINT PEDRO

No. 12421

Chellapackiam wife of K. Kandavanam of Karaveddy North, Karaveddy

Vs. Plaintiff

1 Kathiravelu Rajadurai and
2 wife Vanithamany
3 Sinnathamby Santhiraporabu
4 Sinnathamby Siriskandarajah
5 Thamber Krishnapillai
6 and wife Ledchumiparan
7 Kumaru Krishneespararan
8 and wife Sivaneswary
9 Iyadurai Kandasamy and wife
10 Sivaneswary
11 Krishnapillai Iswaranathan
12 Krishnapillai Packiyawathie
13 Kathiripillai Selvarajah
14 and wife Pathmawathy
15 Chinniah Mylvaganam
16 and wife Pathinipillai
7 Chinniah Ratnasingam—all of Pon Kandiah Veedy, Karaveddy North
18 K. Kandavanam Court Road - Point Pedro

Defendants

It is hereby notified that action No. 12421 has been instituted in the District Court of Point Pedro under the Partition Act No. 16 of 1951 for the partition / sale of the land The defendants in the aforesaid action are summoned to appear in Court on the 5th day of July 1975.

By order of Court
Sgd. M. Nadarajah
Registrar

This 12th day of May 1975
9. 27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org